திட்டங்கள் திட்டமிடுதல் வடிவமைப்பு கோட்டம் திருநெல்வேலி 11

செ.பொ
க.கா
ஆ.வ.அ

எண்: 245 நாள் 7/2/2022

**கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், நீர்வளத் துறை திட்ட உருவாக்க வட்டம், திருச்சிராப்பள்ளி-620 020.**

ஆணை பிறப்பிப்பவர் : பொறி. ர. ஜமுனா தேவி, பி.இ.,
கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து.,

**செயல்முறை ஆணை எண்.பஎ2/319/2019/நபஅவரு/நாள்:31.01.2022.**

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி – திருமதி. கே. எஸ். சிந்து ஷிவானி, இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு 01.09.2017 முற்பகல் பணியில் சேர்ந்தது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை – 5அவர்களது செ.மு.ஆ.எண்: எஸ்3(4) / 39720 / 2016 / நாள்:30.06.2017.
2. அரசாணை (நிலை) எண்100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (எம்) துறை, நாள்:01.08.2018
3. செயற்பொறியாளர், திட்டங்கள் திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு கோட்டம், திருநெல்வேலி அவர்களது க.எண்:பஉ/01(1366)/2018-2019/நாள்:25.01.2019
4. அரசாணை (நிலை) எண்18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை/நாள்:23.01.2020.
5. அரசாணை (நிலை) எண்48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1)துறை/நாள்:26.02.2021.

********

கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம், நாகர்கோவிலில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. ஜி. சசிகுமாரன் நாயர் எனபவர் 20.02.2002 அன்று மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது மகள் திருமதி. கே. எஸ். சிந்து ஷிவானி என்பவருக்கு, பார்வை 1ல் கண்டுள்ள முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை-5 அவர்களது செயல்முறை ஆணையின் படி கருணையின் அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, இவ்வட்டத்தைச் சார்ந்த திட்டங்கள் திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு கோட்டம், திருநெல்வேலியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம், நாகர்கோவிலுக்கு ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, திருமதி. கே. எஸ். சிந்து ஷிவானி, இளநிலை உதவியாளராக 01.09.2017 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.



Scanned by TapScanner

தனியரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 01.09.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உரிய அரசாணையினை பெற்றுத்தரக் கோரி பார்வை 3-ல் கண்டுள்ள செயற்பொறியாளரது கடிதத்தின் மூலமாக உரிய கருத்துருக்கள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது. பார்வை 2-ல் காணும் அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், பார்வை 4-ல் காணும் அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குவது தொடர்பாக ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் திருமதி. கே. எஸ். சிந்து ஷிவானி பூர்த்தி செய்துள்ள நிலையில் பார்வை 5-ல் காணும் அரசாணையின் அடிப்படையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட நாளான 01.09.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் அப்பதவிக்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது. இவ்வாறு முன்நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், தனியர் ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்..

1.2.22

கண்காணிப்புப்பொறியாளர், நீ.வ.து.,சார்பில்.,
திட்ட உருவாக்க வட்டம், திருச்சி - 20.

1/2/22

**பெறுநர்:**
திருமதி. கே.எஸ். சிந்து ஷிவானி,
இளநிலை உதவியாளர்,
திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு உபகோட்டம்,
நாகர்கோவில்,

**வழி:** செயற்பொறியாளர், நீ.வ.து., திட்டங்கள் திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு கோட்டம், திருநெல்வேலி.

மே.கு.எண்: ப2/243/2022/நாள்: .02.2022-ன்படி
உரியவருக்கு அனுப்பப்படுகிறது.

செயற்பொறியாளர், பொ.ப.து., நீ.வ.து.,
திட்டங்கள், திட்டமிடுதல் & வடிவமைப்பு கோட்டம்
திருநெல்வேலி - 11
8.02.2022
8.2.2022

பெறுநர்:-
திருமதி கே.எஸ். சிந்து ஷிவானி,
இளநிலை உதவியாளர்,
திட்டமிடுதல் (ம) வடிவமைப்பு உபகோட்டம்,
நாகர்கோவில்
வழி:- உதவி செயற்பொறியாளர், நீவது, தி (ம) வ. உபகோட்டம், நாகர்கோவில்.

D:AB/E2/319/T2/01.02.2022

இணைப்பு:- பணிப்பதிவேடு மற்றும் சான்றிதழ்கள் பெறப்படவில்லை.

Scanned by TapScanner